உ

கணபதி துணை

அளவெட்டி

# கும்பழாவளை விநாயகர்



# திருவிரட்டை மணிமாலை

வெளியீடு:

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

தெல்லிப்பழை

15 - 05 - 1992

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
கணபதி துணை

# அளவெட்டி
# கும்பழாவளை விநாயகர்
# திருவிரட்டை மணிமாலை

ஆக்கியோன்: **விழிசைச் சிவம்**

வெளியீடு:
**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**
தெல்லிப்பழை
ஆங்கிரச ஞு வைகாசி மீ 02ஆம் நாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

எமது நாட்டிலேற்பட்ட அரசியற் ப[illegible]ள் காரணமாகச் சொந்த இடத்தை விட்டு 1990ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் தொடக்கமாக அளவெட்டியில் வசித்து வருகிறோம். வெள்ளிக்கிழமைகளிலும் வேறும் விசேட காலங்களிலும் கும்பழாவளைப் பிள்ளையார் கோயிலுக்குச் சென்று தரிசனம் செய்வது வழக்கம். 1991ஆம் ஆண்டு வைகாசி மாதம் நடைபெற்ற தேர்த்திருவிழாவுக்குச் சென்றிருந்தேன். மூன்று தேர்களில் மூன்று மூர்த்திகள் எழுந்தருளிவந்த காட்சியைக் கண்ணுற்றேன். தேர்களில் மூர்த்திகள் எழுந்தருளி வரும் போது பாடக்கூடியதாகச் சிறுவர் பாடல் ஒன்று இயற்றினேன். சப்பரத்தின் காட்சியையும் ஒரு பாடல் ஆக்கினேன். மறுநாள் பிள்ளையார் தீர்த்தக் குளத்திற்குச் சென்ற காட்சியையும் ஒருபாடல் ஆக்கினேன். பின்பு இம்மூன்று பாடல்களையும் எமது ஊரவரும், உறவினரும், பல்கலை வல்லுநருமாகிய பண்டிதர் க. உமாமகேஸ்வரம்பிள்ளை அவர்களுக்குக் காட்டினேன். அவர் அவற்றைப் பார்த்துவிட்டு "இவை நல்ல பாடல்கள்; ஆயினும் நீங்கள் விநாயகர் மீது திருவிரட்டை மணிமாலை போன்ற ஒரு முறையான பிரபந்தம் பாடினால் நன்று" என்று கூறிச் சில ஆலோசனைகளும் வழங்கினார்கள், அவரது உதவியோடு விநாயகப் பெருமானது அநுக்கிரகத்தால் திருவிரட்டை மணிமாலை என்ற இச்சிறு பிரபந்தத்தைப் பாடிமுடித்தேன். அன்பர்கள், அறிஞர்கள் ஆதரிப்பார்களாக.

சே. சிவசுப்பிரமணியம்
ஒய்வுபெற்ற அதிபர்.

விழிசிட்டி,
வித்தகபுரம்,
தெல்லிப்பழை,
*21-9-91.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணபதிதுணை

அளவெட்டி, கும்பழாவளை விநாயகராலயப்
பிரதமகுரு

**பிரமஸ்ரீ இ. சோமசுந்தரேஸ்வரக் குருக்கள்**

வழங்கிய

# ஆசியுரை

திருவாளர் செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் ஓய்வு பெற்ற அதிபர். விழிசிட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவர். சைவாசாரசீலர், சிவபக்தி, குருபக்தி என்பன உடையவர். தமிழ் இலக்கண இலக்கியங்களிலும், சமய சாஸ்திரங்களிலும், புராணபடனத்திலும் ஈடுபாடு உடையவர். திருமுறைப் பண்ணிசைப் பயிற்சி பெற்றவர். செய்யுள் இயற்றும் ஆற்றல் உள்ளவர். நகுலகிரிப் புராணத்துக்கு உரையெழுதிச் சாகித்திய மண்டலப் பரிசு பெற்றவர். நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வரப் பெருமான்மீது பக்திரசக் கீர்த்தனைகள் பாடியுள்ளார். சிவாலய தரிசனவிதி என்னும் சிறு நூல் ஒன்று எழுதியுள்ளார். அது மாவை ஆதீன வெளியீடாக வெளியிடப்பட்டுள்ளது. இப்பெரியார் தற்கால அரசியற் சூழ்நிலைகள் காரணமாக 1990ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் தொடக்கமாக அளவெட்டிக்கு வந்து எமது ஆலயத்துக்கு அண்மையிலே வசித்து வருகிறார். வெள்ளிக்கிழமைகளிலும் வேறு விசேட காலங்களிலும் தரிசனத்துக்காக ஆலயத்துக்கு வருவார். இவர் கும்பழாவளைப் பிள்ளையார் மீது கொண்ட பக்திமை காரணமாகத் "திருவிரட்டை மணிமாலை" என்னும் இச்சிறு பிரபந்தத்தைப் பாடியுள்ளார். சப்பரத் திருவிழா, தேர்த் திருவிழா, தீர்த்தத் திருவிழாக் காட்சிகளையும் சிறுவர் பாடல்களாகப்பாடி இணைத்துள்ளார். இப்பாடல்களைப் படித்துப் பார்க்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது இவர் இக்காட்சிகளை நேரிலே தரிசித்து அனுபவித்துப் பக்திவசப்பட்டுப் பாடியுள்ளாரென்பது தெரிகிறது. எம்பிரானின் திருவருள்தான் இப்பெரியாரை இவ்வூருக்கு வரச்செய்ததென எண்ணுகிறேன். விநாயகப் பெருமான் அடியார்கள் இந்நூல் அச்சிட்டு வெளிவர உதவிபுரிவதோடு ஒவ்வொரு புத்தகமாவது வாங்கிப் படித்துப் பயன்பெறுவார்களாக. இப்பெரியார் இன்னும் பல்லாண்டுகள் சுகத்துடன் வாழ்ந்து இவ்வாறன நல்ல சேவைகள் செய்ய எல்லாம் வல்ல விநாயகப் பெருமான் அருள்புரிய வேண்டுமென வேண்டி ஆசீர்வதிக்கிறேன்.

*அளவெட்டி,*
*14-12-1991*

இ. சோமசுந்தரேஸ்வரக் குருக்கள்
(ஈசான சிவாச்சாரியார்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

ஆலய வழிபாட்டிலும் ஆன்மீக வாழ்க்கையிலும் தாம் பெற்ற அறிவை முற்றுகப் பயன்படுத்தி நிறை வாழ்வு வாழ்ந்துகொண்டு இருப்பவர் எங்கள் வணக்கத் துக்குரிய திரு. சிவசுப்பிரமணியம் ஐயா அவர்கள். விழிசிட்டிக் கிராமத்துக்கு அணிசெய்துகொண்டு இருப் பவர்கள் இவர்கள். பக்தியிலும், பண்பாட்டிலும் திரு முறைப் பயிற்சியிலும், புராணங்களைப் போற்றுவதிலும் இவ்வூர் மக்களுக்கு நிகரானவர்கள் இல்லை என்றே கூற லாம். இந்த அடிப்படையில் இந் நூலாசிரியர் அருட் பாக்களைப் பாடியும், புராணங்களுக்கு விரிவுரை செய் தும், ஆசிரியப்பணியிலும், அதிபர் பணியிலும் மிக ஈடுபாடு கொண்டவராகவும் விளங்கிவந்தமை கண்கூடு. தன் ஊரைவிட்டுஇடம் பெயர்ந்து வாழ்ந்துகொண்டிருக் கிற நேரத்திலும் சலனமற்ற உள்ளத்தினராய் கும்ப ழாவளை விநாயகர்மீது **திருவிரட்டை மணிமாலை** பாடி பேரானந்தம் கண்ட பெருமை இவருக்கு உண்டு. இப் பாமாலையை அச்சடித்து வெளியிட வேண்டுமென்ற ஆர் வத்திஞல் எமது தேவஸ்தானத் தயவை வேண்டி நின் ருர். இதேநேரத்தில் அளவெட்டி கும்பழாவளைப் பெரு மானுக்கு நாம் செலுத்தும் காணிக்கையாகவும் எங்கள் வணக்கத்துக்குரிய ஆசிரியர் சிவசுப்பிரமணிய ஐயா வுக்கு நாம் செலுத்தும் நன்றிக்கடஞகவும் நாம் இதனை ஏற்றுக்கொண்டோம்,

இலகு தமிழில் அமைந்திருக்கும் இப் பாமாலை அனைவராலும் படித்து இன்புறத்தக்கது. எனவே அளவெட்டி கும்பழாவளைப் பெருமானுடைய மகோற்சவ காலத்தில் இந்நூல் வெளிவருவது வரவேற்கத்தக்கது. நூலாசிரியரின் இத்தகைய ஆன்மீகப் படைப்புகள் மேலும் வெளிவரவேண்டும் என்று எல்லாம் வல்ல துர்க்காதேவியைப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

**தங்கம்மா அப்பாக்குட்டி J. P.**
*தலைவர்*
*ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்*

*தெல்லிப்பழை*
*09-05-1992.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கணபதிதுணை

# அளவெட்டி, கும்பழாவளை விநாயகர்

# திருவிரட்டை மணிமாலை

## காப்பு

### கட்டளைக் கலித்துறை

மலரிணை யிட்டு வணங்கு மடியவர் வேண்டுவன
கலைக ளருள்கும்ப ழாவளை வாழுங் கணபதியே
உலகம துய்ந்திட வேண்டியுன் மீதி விரட்டைமணி
மலையது பாட அடியனை உன்பதங் காப்பதுவே.

### வெண்பா

உலகம் புகழ்ந்தேத்து மோங்கார ரூபா
அலகில்சீ ராரறிய வல்லார் – நிலையினின்று
சுற்றிவலம் வந்தரனைத் தோத்திரித்து மாம்பழத்தைப்
பெற்றிடநீ வல்லயலை யோ.

### கட்டளைக் கலித்துறை

அலையாரு மார்கலி சூழ்தரு பூமியில் வாழ்வுறுவார்
கலைதேரும் போதிற் கணபதி யேதுணை யென்றிடுவார்
தலைதனில் மும்முறை குட்டியுன் முன்னரே தாழ்ந்தெழுவார்
சிலையென வெண்ணுஞ் சிதடரறியாருன் சீரினையே.

### வெண்பா

சீர்கும்ப ழாவளைவாழ் செல்வ விநாயகனே
ஏரும்ப ரேத்து மெழிற்பதியில் — நீர்தங்கு
தீர்த்தக் குளத்தருகே திவ்வியமாங் கோயிலுளீர்
பார்த்தருள்வீ ரையா பரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டளைக் கலித்துறை

பரஞ ருளமகிழ் பால பயிரவன் சோதரனே
கரமைந் துடைய கணபதி யேகய மாமுகனே
உரமே கிழியவுன் கொம்பாற் றடிந்துமே உம்பர்தமைத்
திரமாக வாழ்ந்திடச் செய்த திறமதைப் போற்றுவமே.

## வெண்பா

போற்றற் குரியவனே புன்மையெலாம் போக்கிடுவாய்
சாற்றற் கரிய சரணமதைத் — தேற்றமுடன்
என்றுமே ஏத்த இனிதருள்வா யானைமுகா
பொன்றும் பொருளாசை போக்கு.

## கட்டளைக் கலித்துறை

போக்கும் வரவும் புணர்வுமில் லாத புனிதவுன்றன்
காக்கும் கழல்கள் தமைமறந் தேயிங்கு வாழுவெஞே
நீக்க மறவே நிறைந்துநிற் பாயுன்னைத் தன்மனத்தே
ஆக்க மறந்தவ ராரிடர் தீர்ந்தா ரவனியிலே.

## வெண்பா

அவமாக வேபொழுதை ஆக்குவா ருன்னைத்
தவமாக வேதுதிக்க எண்ணுர் - சிவபாலா
மைந்தர் பிழைபொறுத்து மாண்புடனே நல்லருளைத்
தந்தருள்வா யையா சரண்.

## கட்டளைக் கலித்துறை

சரணா விந்த மதுசூட வெண்ண ருனைமறந்து
முரண ரழியும் நிலையுறும் போதினில் மூவசை போய்த்
திரண ரழிந்த நிலைகண்டே யேங்கித் தியங்குவரே
அரண ரளித்த வழகா வடியோமைக் காத்தருளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெண்பா

காத்தருள் வீரென்று கைதொழுவார் தம்மைநிதம்
பார்த்தருள் செய்யும் பரனேயுன் — ஏத்தரிய
பொன்னடியைப் போற்றிடுவோம் பூரணனே எங்களுக்கு
நன்னெறியைக் காட்டிடுவா யே.

## கட்டளைக் கலித்துறை

வாயா லுனையென்றும் வாழ்த்திட வெண்ணார்தம் வன்றலையால்
சேயா முனையே வணங்கிட வெண்ணர் தினமுமிங்கே
நாயா யலைந்து திரிவார் எவர்க்குமே நன்மை யிலார்
தீயாரைச் சேருவார் தீர்த்திட மாட்டார்தம் விக்கினமே.

## வெண்பா

விக்கினங்கள் தீர்ப்பவனே வீரமெலா மீபவனே
துக்கமெலாம் போக்கியெனைத் தூயவர்கள் — தக்கவனே
என்றேதான் கூறிடவே எய்தவைப்பா யேரம்பா
என்றுமே யுன்ருள் துணை.

## கட்டளைக் கலித்துறை

துணையா யிருப்பார் பலரென வெண்ணித் துயருழந்தேன்
அணையா விளக்கா யமைந்திடு நீயன்றி வேறொருவர்
துணையாக மாட்டா ரெனவறிந் தேயுன் துணையடிகள்
புணையாகப் பற்றிநின் றேனைப் புரந்திடு தேவமுதே.

## வெண்பா

தேவர் துயர்தீர்த்த தேவாதி தேவநிதம்
பூவதனில் நாங்களிடர் தானடைதல் — போவதுதான்
இல்லையோ ஈசா எமைமறந்தே நீரிருந்தால்
தொல்லையே எம்வாழ்வு தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டளைக் கலித்துறை

வாழ்வதும் தாழ்வதும் நாமுன்பு செய்த வினைப்பயனே
ஊழ்வினை யென்ப திதுவே இதனை ஒழிக்க வுன்னைச்
சூழ்தலும் தாழ்தலு மன்றிப் பயனில வேற்றுவழி
ஆழ்கடல் சூழ்புவி உள்ளோர் இதனை அயர்த்தனரே.

## வெண்பா

அயர்த்தா ரறவழியை யார்நிலத்தி லுய்தார்
துயர்தான் தொடரப் பெறுவார்— மயல்போக்கி
உன்னை நினையாதார் உன்னடியைத் தான்பணியார்
முன்னை வினைப்பயனு லே.

## கட்டளைக் கலித்துறை

பயனை யறியாது பாவ வழிசெல் பதடிகளே
அயனைச் சிறைசெய் யறுமுக னண்ணனை யேதினமும்
பயமுறு பத்தியாய்ப் பாதந் தொழுமின் பயன்பெறுவீர்.
கயமுக னைக்கொன்ற கடவு ளுங்களைக் காப்பரன்றே.

## வெண்பா

காக்குங் கணபதியைக் காதலித்து நாடோறும்
பூக்கொண்டு பொன்னடியைப் போற்றிடுமின்—நாக்கொண்டு
ஏத்திடுமி னென்றென்று மெய்திடுவீ ரின்பமதைத்
தீத்திறத்தைச் சேரா திரும்.

## கட்டளைக் கலித்துறை

சேரா விடந்தனைச் சேர்வது தீதென வேபெரியோர்
ஆராய் வுடனே அறிவுரை கூறிவைத் திட்டனரே
சீராக வாழ்ந்திட வேண்டுமெ னிற்கும்ப முாவளைவாழ்
பேரார் கணபதி நாமந் தினந்தினம் பேசுவமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வெண்பா

பேசும் பெரும் பொருள் பெம்மான் திருவடி
பூசும்வெண் ணீறு புனைவதற்குக்—காசிலுயர்
கண்டிகையு முண்டவற்றைக் காதலுடன் கொண்டிடுவீர்
எண்டிசையும் போற்று மினிது.

### கட்டளைக் கலித்துறை

இனிதாக வாழ இதயத்தி லேயெண்ணு மேதிலரே
கனியாய் விளங்குங் கணபதி யைத்தினங் காதலித்துப்
பனியார் மலர்கள் பதமலர் மீது சொரிந்திடுவீர்
இனிதே யகன்றிடு மேதமெ லாமிவ் வுலகினிலே.

திருவிரட்டை மணிமாலை முற்றிற்று.

---

அநுபந்தம்

## கும்பழாவளைச் சப்பரம்

கும்பழாவளைச் சப்பரம்—அது
கோலாகலமான சப்பரம்
நம்பினோர்க் கருளும் நாயகன்
நயந் தெழுந் தருளும் சப்பரம்.

மூன்றுவாசல் கொண்ட சப்பரம்—அது
முடிகள் ஐந்துகொண்ட சப்பரம்
ஈன்ற நாயகனும் இளைய நாயகனும்
இனிதெழுந் தருளும் சப்பரம்.

ஐந்தடுக்குள்ள சப்பரம் — அது
அழகு மிக்குள்ள சப்பரம்
தந்தி மாமுகனை நம்பியே வாழும்
தரணியோர் போற்றும் சப்பரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கும்பழாவளைத் தேர்த்திருவிழா

தேரில் வாருர் மூத்த பிள்ளையார்
தேரில் வாருரே
தேரில் வாருர் கணபதியார்
தேரில் வாருரே.

ஆனைமுக முடையபெம்மான்
தேரில் வாருரே
பானைவயி றுடையபெம்மான்
தேரில் வாருரே.

விக்கினங்கள் தீர்த்திடுவார்
தேரில் வாருரே
துக்கமெலாம் நீக்கிடுவார்
தேரில் வாருரே.

அன்பர்களுக் கருள்புரிவார்
தேரில் வாருரே.
துன்பமெலாம் போக்கிடுவார்
தேரில் வாருரே.

அடியவர்கட் கருள்புரிவார்
தேரில் வாருரே
மிடிகளெலாம் போக்கிடவே
தேரில் வாருரே.

ஆறுவாக னமுடையார்
தேரில் வாருரே.
பாகுகனி மொழியுமையாள்
பாலன் வாருரே.

வல்லபை மணாளன் முதல்
தேரில் வாருரே
வள்ளிமண வாளன் இரண்டாம்
தேரில் வாருரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மையப்பர் மூன்றுவது
தேரில் வாருரே
எம்மையெலாம் காத்திடவே
தேரில் வாருரே.

தேரில் வடம் பிடித்திடவே
அன்பரே வாரீர்—தேவர்
ஊரில் இடம் பிடித்திடவே
அன்பரே வாரீர்.

## கும்பழாவளைத் தீர்த்தத் திருவிழா

(பிள்ளையார்)

தீர்த்தக் குளத்துக்குச் சென்ற அந்தத்
திவ்விய காட்சியைக் கண்டேன் நானன்று
பார்த்திடக் கண்கள் போதாவே—அதைப்
பகர்ந்திட நாவொன்று போதுமோ அம்மா.

கொடிகள் குடைகளைத் தாங்கித் தொண்டர்
கூட்டம் முன்செல்ல முழங்கிட மேளம்
அடியவர் சாமரை வீசப்—பல
அன்பர்கள் அரகர வென்றுரர்ப்பரிக்க.

படிகளிற் பத்தர்கள் பல்லோர்—அங்கு
பத்தியா யிருந்து பார்த்துக் களிக்க
அடியவர்க் கருள்புரி ஐயன்—அன்று
அங்கெழுந் தருளிய ஆனந்தக் காட்சி.

கண் கொள்ளாக் காட்சிய தாகும்—அது
கற்பனைக் கெட்டாத காட்சியே யம்மா
எண்ணத்தில் அடங்காத காட்சி—அது
எழுத்திலும் சொல்லிலும் அடங்கிடாதம்மா.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# நன்றியுரை

அடியேன் கும்பழாவளை விநாயகர் மீது "திருவிரட்டை மணிமாலை" இயற்றுவதற்குத் தூண்டு கோலாக இருந்த பண்டிதர் க. உமாமகேஸ்வரம்பிள்ளை அவர்களுக்கும், ஆசியுரை வழங்கிய ஷ்டி ஆலயப் பிரதமகுரு பிரமஸ்ரீ இ. சோமசுந்தரேஸ்வரக் குருக்கள் அவர்களுக்கும், எனது வேண்டுகோளை ஏற்று இந் நூலை அச்சிட்டு வெளிப்படுத்தியும், பதிப்புரை தந்தும் என்னை ஆதரித்த அநாதரட்சகியும், துர்க்கா துரந்தரியுமாகிய சிவத் தமிழ்ச் செல்வி, பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையார் அவர்களுக்கும், தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ் தானத்தினருக்கும் குறுகிய காலத்தில் அழகாக அச்சிட்டுதவிய சுன்னாகம், திருமகள் அழுத்தகத்தினருக்கும் எனது மனமார்ந்த நன்றியறிதலைக் கூறுகின்றேன்.

விழிசிட்டி,
வித்தகபுரம்,
தெல்லிப்பழை.
15 - 05 - 1992

**சே. சிவசுப்பிரமணியம்**
ஆக்கியோன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமகள் அழுத்தகம், சுன்னுகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org